بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *06/11/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

✪ தஹ்ரீகே ஜதீதின் 92 ஆவது ஆண்டில் ஜமாஅத் மக்கள் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட பொருள் தியாகங்கள் பற்றிய குறிப்பு

✪ 93 ஆவது ஆண்டின் துவக்கம் பற்றிய அறிவிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

அல்லாஹ் தஆலா திருக்குர்ஆனில் கூறுகிறான்:

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ ؕ

அதாவது, "நீங்கள் நேசிக்கின்றவற்றிலிருந்து (இறைவழியில்) செலவு செய்யாதவரை நீங்கள் நன்மையை ஒருபோதும் அடைந்துவிட முடியாது."

ஒரு நபிமொழியில் வருகிறது; இந்த இறைவசனம் அருளப்பட்டபோது, ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் மிகவும் மதிப்புமிக்க தமது 'பைருஹா' என்ற தோட்டத்தை, "இதுவே எனக்கு மிகவும் பிரியமான சொத்து" என்று கூறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சமர்பித்தார்கள். இதுதவிர, பல நபித்தோழர்கள்(ரலி) பொருள் தியாகத்திற்கான அறைகூவல் விடுக்கப்படும் போதெல்லாம் முன்னணியில் நின்று, தங்கள் செல்வத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் அர்ப்பணித்தார்கள் என்றும் ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஒளிமயமான நட்சத்திரங்கள் இன்றும் நமக்கு வழிகாட்டும் தீபங்களாகத் திகழ்கிறார்கள்.

பின்னர், அல்லாஹ் தஆலாவின் வாக்குறுதிகளின்படி இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக் காலம் வந்தபோது, அக்காலகட்டத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அன்னாரது தோழர்களும்(ரலி) தியாகங்களைச் செய்தார்கள்; ஏனெனில் அன்னார் (அலை) தமது தோழர்களுக்கு அத்தகைய தியாகங்களின் புரிதலை வழங்கியிருந்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:

“பயனற்ற, மதிப்பற்ற பொருட்களைச் செலவழிப்பதன் மூலம் எந்தவொரு மனிதனும் நன்மை செய்துவிட்டதாக வாதிட முடியாது. நன்மையின் வாசல் மிகவும் குறுகலானது. எனவே, அற்பமான பொருட்களைச் செலவிடுவதன் மூலம் எவரும் அதில் நுழைந்துவிட முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஏனெனில் குர்ஆனின் தெளிவான கூற்று, لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ உங்களுக்கு மிகவும் விருப்பமான, மிகவும் பிரியமான பொருட்களை நீங்கள் செலவிடாத வரை, (இறைவனுக்கு) விருப்பமானவராகவும் நேசத்திற்குரியவராகவும் ஆகும் அந்தஸ்தைப் பெற முடியாது. நீங்கள் சிரமங்களைச் சகித்துக்கொள்ள விரும்பாமலும், உண்மையான

நன்மையை மேற்கொள்ள விரும்பாமலும் இருந்தால், நீங்கள் எவ்வாறு வெற்றியையும் இலக்கையும் அடைய முடியும்? நபித்தோழர்களுக்குக் கிடைத்த அந்த அந்தஸ்தை அவர்கள் வெறுமனே அடைந்து விட்டார்களா?..... உண்மை என்னவென்றால், தற்காலிகமான சிரமங்களை சகித்துக்கொள்ளாத வரை, உண்மையான மகிழ்ச்சிக்குக் காரணமான அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெற முடியாது."

இந்த ஆன்மாவைத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தில் உருவாக்க முயற்சித்தார்கள். அன்னாரது தோழர்களும் தியாகங்களில் எந்த அளவுக்கு உயர்ந்துவிட்டார்கள் என்றால், **"நமது ஜமாஅத்தில் எப்படிப்பட்டவர்களும் இணைந்துள்ளதை நான் காண்கிறேன் என்றால், அவர்களின் உடலில் அணிவதற்கே உடை கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஒரு போர்வையோ அல்லது கீழாடையோ கூடக் கிடைப்பது கடினமாக உள்ளது; ஆனால் அவர்களின் தூய்மை, நன்றி விசுவாசம் மற்றும் அன்பைக் காணும்போது மனம் வியப்பிலும் ஆச்சரியத்திலும் ஆழ்கிறது" என்று அன்னார் கூற நேர்ந்தது.** அன்னார் (அலை) ஏற்படுத்திய அந்த மாற்றத்திற்கு நிகரான வேறு எந்த முன்னுதாரணமும் காணக் கிடைப்பதில்லை.

இன்று தியாகத்தின் உண்மையான ஆன்மாவை ஓர் அஹ்மதி உணர்ந்திருப்பதைப் போல வேறு எவரும் உணரவில்லை. இன்று அத்தகைய தியாக முன்மாதிரிகளை நாம் ஜமாஅத்தில் காண்கிறோம். காலத்தின் கலீஃபாவை ஒருபோதும் நேரில் பார்த்திராத பலரும் இருக்கிறார்கள்; அவர்கள் MTA -வில் புகைப்படத்தைப் பார்த்திருக்கிறார்கள் அல்லது குரலைக் கேட்டிருக்கிறார்கள். ஆனாலும் உளத்தூய்மையிலும் விசுவாசத்திலும் தொடர்ந்து முன்னேறிச் செல்கிறார்கள். உலகம் இவர்களைப் பற்றி அறிவதில்லை; வெளிப்பார்வைக்கு இவர்கள் குறைந்த கல்வி கற்றவர்களாகத் தோன்றலாம். ஆனால் அவர்கள் திருக்குர்ஆனின் போதனைகளைப் பற்றிய புரிதலைக் கொண்டுள்ளார்கள்; அதன்படி செயல்படவும் முயற்சிக்கிறார்கள்.

குவாதேலூப்பைச் (Guadeloupe) சேர்ந்த ஒரு புதிய அஹ்மதியின் ஓர் உதாரணம் உள்ளது. இவர் அண்மையில் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டு என்னையும் சந்தித்தார். இங்கு ஜமாஅத் எவ்வாறு செயல்படுகிறது என்பதை அவர் பார்த்தார். ஜமாஅத்தின் நிதி அமைப்பைப் பற்றியும், மக்கள் எவ்வாறு சந்தா வழங்குகிறார்கள் என்பதும், அதன் மூலம் இஸ்லாத்தை பரப்புவதற்கான என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதும் அவருக்கு விளக்கப்பட்டது. இந்த தியாகங்களின் பயன்பாடுகள் குறித்து அவருக்கு தெரிவிக்கப்பட்டபோது, அவர் மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். மேலும், ஜமாஅத் இந்த செல்வத்தை இறைவழியில் எவ்வாறு செலவிடுகிறது என்பதை ஆண்டு மாநாட்டில் நான் என் கண்களாலேயே பார்த்தேன் என்று கூறினார்.

மிஷனரி சாஹிப் எழுதுகிறார்கள்: இந்த நிகழ்வில் ஈமானுக்கு ஒளியூட்டும் மற்றோர் அம்சம் என்னவென்றால், தஹ்ரீகே ஜதீத் சந்தாவுக்கான (நிதியாண்டின்) இறுதி நாளில் என்னிடம் வந்தார். எனக்கு ஆறு வயது மகன் உள்ளான். அவன் சார்பாக ஆறு யூரோக்கள் சந்தா இதுவாகும் என்று கூறினார்.

அவர் கூறுகிறார்; 'ஜமாஅத் எவ்வாறு தியாகங்களைச் செய்கிறது என்பதை நான் என் மகனிடம் கூறிக் கொண்டிருந்தேன். நான் அவனை பூங்காவிற்கு அழைத்துச் சென்றபோது, ஊஞ்சலுக்கான டிக்கெட்டை வாங்க முற்படும்போது அவன் என்னிடம், நான் இன்று ஊஞ்சலில் அமர மாட்டேன்; மாறாக இந்தப் பணத்தை என் சார்பாக இறைவழியில் கொடுத்துவிடுங்கள் என்று கூறினான்.'

வெளிப்படையாகப் பார்த்தால் இது ஒரு சிறிய தொகையாகத் தோன்றினாலும் அந்தச் சிறுவன் சார்பாக இது ஒரு மகத்தான தியாகமாகும்.

கினி கனாக்ரியிலிருந்து ஒரு நிகழ்வு; தூலா சாஹிப் என்பவர் மிகவும் ஏழ்மையான ஓர் அஹ்மதி ஆவார். அவர் தனது தஹ்ரீகே ஜதீத் சந்தாவாக முப்பதாயிரம் ஃபிராங்குகளை எழுதியிருந்தார். அவர் கூறுகிறார்: எனது மகளின் திருமணமும் நடைபெறவிருந்தது. அதற்காக நான் சேமித்து வைத்திருந்தேன். அச்சமயத்தில் முஅல்லிம் சாஹிப் சந்தா வசூலிக்க வந்தார். மகளின் திருமணத்திற்காக சேமித்து வைத்திருந்த தொகையை அவரிடம் கொடுத்து சந்தாவில் சேர்த்துக் கொள்ளச் செய்தேன். இதற்குப் பிறகு எல்லாம் வல்ல இறைவன் எத்தகைய அருளைப் பொழிந்தான் என்றால், ஃபிரான்ஸ் செல்வதற்காக வீட்டை விட்டுச் சென்று பல காலமாக எந்தத் தொடர்பும் இல்லாமல் இருந்த எனது மகன் - அவன் வழியிலேயே எங்காவது இறந்துவிட்டானோ என்று எண்ணுமளவிற்கு நீண்ட காலமாகியிருந்தது - திடீரென ஒரு நாள் அவனிடமிருந்து அழைப்பு வந்தது. அவன் பிரான்ஸை அடைந்துவிட்டதாகவும், எங்களுடைய செலவுகளுக்காக ஒரு பெருந்தொகையை அனுப்புகிறேன் என்றும் கூறினான்.

அவர் கூறுகிறார்: சந்தா கொடுத்ததன் காரணமாக எனக்கு எனது மகனைப் பற்றிய தகவல் கிடைத்ததோடு, அல்லாஹ் எனக்குப் பல மடங்கு தொகையையும் திருப்பித் தந்தான். இது எனது ஈமானை பெரிதும் முன்னேறச் செய்தது.

அர்ஜென்டைனின் முரப்பி சாஹிப் எழுதுகிறார்கள்: நாசிர் இர்க்யோனிஸ் சாஹிப் என்பவர் அர்ஜென்டைனின் முதல் உள்ளூர் அஹ்மதியாவார். அவர் நாட்டின் ஒரு புகழ்பெற்ற பத்திரிகையாளராக இருந்தார். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக உடல்நலக்குறைவால் முடங்கிப்போனார். அவரது குடும்பத்தினர் தொடர்ந்து நிதி நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர். சில சமயங்களில் மருந்துகளுக்குக் கூட பணம் இருப்பதில்லை.

முரப்பி சாஹிப் கூறுகிறார்: உங்கள் சூழ்நிலை சந்தா கொடுக்கும்படி இல்லை என்றாலும், பரக்கத்திற்காக ஏதேனும் கொடுக்க விரும்பினால் கொடுங்கள் என்று நான் அவரிடம் கூறினேன். இதைக் கேட்ட அவர் சில நாட்களுக்குப் பிறகு அவரே தொடர்பு கொண்டு, ஜமாஅத்தின் வங்கிக் கணக்கில் சந்தாத் தொகையை அனுப்பிவிட்டதாகத் தெரிவித்தார். சரிபார்த்தபோது, அவர் 25 டாலர் தொகையை அனுப்பியிருந்தார். இது சிறிய தொகையாக இருந்தாலும், அவரது தனிப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது மிகவும் அசாதாரணமான தியாகமாகும்.

பெனின் நாட்டில் நடந்த ஒரு நிகழ்வு; கிறித்துவத்திலிருந்து அஹ்மதியத்தை ஏற்றுக் கொண்ட ஒரு புதிய அஹ்மதி இருக்கிறார். அவருக்கு ஒரு சிறிய கடை உள்ளது. அவர் கூறுகிறார்: என்னிடம் பத்தாயிரம் ஃபிராங்க் பணம் இருந்தது. பள்ளிக் கட்டணம் செலுத்தாததால் பள்ளி நிர்வாகம் என் மகளை பள்ளியிலிருந்து வெளியேற்றிவிட்டதாகக் கூறி அவள் என்னிடம் வந்தாள். நான் பள்ளி கட்டணத்தை செலுத்த தயாராகிக் கொண்டிருந்தேன். அதே நேரத்தில் தஹ்ரீகே ஜதீத் சந்தா பெறுவதற்காக முஅல்லிம் சாஹிப் வந்தார். நான் அந்தத் தொகையை சந்தாவாகக் கொடுத்துவிட்டேன். அல்லாஹ்வின் அருள் எங்கனம் உண்டானது என்றால், அன்றைய தினம் எந்த அளவு (அதிகமாக) வாடிக்கையாளர்கள் வரத் தொடங்கினார்கள் என்றால், இரண்டு லட்சம் ஃபிராங்க் மதிப்புள்ள பொருட்கள் விற்பனையாகி நல்ல லாபம்

கிடைத்தது. இதனால் அன்றைய தினமே நான் எனது மகளின் பள்ளிக் கட்டணத்தையும் செலுத்திவிட்டேன்.

பலர் தாங்கள் நிதித் தியாகங்களைச் செய்வதாகவும், துஆ செய்வதாகவும் கடிதங்கள் எழுதுகிறார்கள். துஆவுக்காக எனக்கும் தொடர்ந்து எழுதுகிறார்கள். இந்த தியாகங்களின் காரணமாக அவர்களின் சீர்குலைந்த காரியங்கள் சீரடைகின்றன; குழந்தைகளின் சீர்திருத்தமும் ஏற்படுகின்றது.

கனடாவின் தஹ்ரீகே ஜதீதின் லஜ்னா இமாயில்லாஹ்வின் தேசிய செயலாளர் எழுதுகிறார்: ஒரு லஜ்னா உறுப்பினர் தனது பெயரை வெளிப்படுத்தாமல் இவ்வாறு தெரிவிக்கிறார்: "நான் எப்போதும் எனது நிதி நிலைமைக்கேற்ப சந்தா செலுத்தி வந்துள்ளேன்."

கடந்த ஆண்டு நான் நிகழ்த்திய குத்பா உரையில் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் முன்னுதாரணத்தைக் குறிப்பிட்டிருந்தேன்; அதாவது, அன்னார் ஆரம்பத்திலேயே தனது வாக்குறுதியை எழுதச் செய்த பிறகு அதை நிறைவேற்றியும் வந்தார்கள்.

அப்பெண்மணி கூறுகிறார்: "நானும் அதைச் செயல்படுத்த வேண்டும் என்று நினைத்தேன்; எனது வாக்குறுதியை எழுதச் செய்த பிறகு, அதன்படி செலுத்தினேன். அது ஏறக்குறைய இரண்டு மாத சம்பளத்திற்குச் சமமான தொகையாக இருந்தது. அதன் பிறகு அல்லாஹ்வின் பரக்கத்துகளை நான் நேரடியாகக் கண்டேன்; ஏதோ ஒரு மறைமுகமான புதையல் கிடைத்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. தேங்கிக் கிடந்த பல பணிகள் நிறைவேறின. ஒரு வீடு மிக நல்ல விலைக்கு விற்றுப்போனது. மற்றோர் இடத்தில் புதிய வீடு வாங்குவதற்கும் வாய்ப்பு கிடைத்தது."

ரஷ்யாவின் முபல்லி.ீக் இன்சார்ஜ் எழுதுகிறார்கள்: அர்ப்பணிப்புள்ள ஓர் அஹ்மதி உறுப்பினர் இருக்கிறார். ஒருநாள் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவர் என்னிடம் ஒரு கணிசமான தொகையைக் கொடுத்தார். அவரிடம், உங்களுக்கு எந்த பாக்கியும் இல்லை என்று கூறினேன் அதற்கு அவர், நான் எனது சொந்த நாட்டிற்குச் சென்று திரும்பியபோது, மாஸ்கோ வந்திறங்கிய என்னை மற்ற வெளிநாட்டு பயணிகளுடன் விமான நிலையத்திலேயே தடுத்து நிறுத்திவிட்டார்கள். முன்னரும் குடிவரவு அதிகாரிகள் (Immigration Officers) சிறு சிறு காரணங்களுக்காக மக்களைத் தடுத்து திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். அப்போது, 'இறைவழியில் செலவழித்தால் எப்போதும் காரியங்கள் ஈடேறும்' என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. 'என்னைத் திருப்பி அனுப்பாமல் அனுமதித்தால், எனது சொந்த நாட்டிற்குச் செல்வதற்கான டிக்கெட் கட்டணத்திற்கு சமமான தொகையை இறைவழியில் வழங்குவேன்' என்று நான் உறுதி பூண்டேன். இறுதியில் நான் அனுமதிக்கப்பட்டேன்; ஆகவே, எனது வாக்குறுதியின்படி இத்தொகையை வழங்குகிறேன் என்று கூறினார்.

அல்லாஹ்வின் அருளால் தஹ்ரீகே ஜதீத் திட்டத்தின் 92-வது ஆண்டு அக்டோபர் 31 அன்று நிறைவடைந்தது. இப்போது நவம்பர் 1 முதல் 93-வது ஆண்டு துவங்கியுள்ளது. கடந்து சென்ற இந்த ஆண்டில் ஜமாஅத் தஹ்ரீகே ஜதீத் திட்டத்தில் 20.28 மில்லியன் பவுண்டுகள் தியாகம் செய்யும் நல்வாய்ப்பை பெற்றது. இது முந்தைய ஆண்டை விட 7 லட்சத்து 27 ஆயிரம் பவுண்டுகள் அதிகமாகும். சந்தா வழங்குபவர்களின் எண்ணிக்கையிலும் கடந்த ஆண்டை விட நாற்பத்தாறாயிரத்து அறுநூற்று பதினாறு (46,616) அதிகரித்துள்ளது.

அதன்பின் ஹுஸூர் அன்வர் அவர்கள் ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் முதல் 10 நாடுகளின் தரவரிசையைக் குறிப்பிட்டார்கள்; இதில் பிரிட்டன் முதலிடத்தில் உள்ளது. ஜெர்மனி இரண்டாம் இடத்தில்; அமெரிக்கா மூன்றாம் இடத்தில்; அதன் பின் கனடா

*நான்காம் இடத்தில்; மத்திய கிழக்கு நாடு ஒன்று ஐந்தாம் இடத்தில்; இந்தியா ஆறாவது இடத்தில்; ஆஸ்ட்ரேலியா ஏழாவது இடத்தில்; இந்தோனேஷியா எட்டாவது இடத்தில்; கானா ஒன்பதாவது இடத்தில்; மத்திய கிழக்கு நாடு ஒன்று பத்தாம் இடத்தில் உள்ளது. பின்னர் இந்தியாவின் 10 மாநிலங்களின் தரவரிசையைக் குறிப்பிட்டார்கள்; இதில் முதல் இடத்தில் கேரளா உள்ளது. இரண்டாம் இடத்தில் தமிழ்நாடு உள்ளது. மூன்றாம் இடத்தில் தெலுங்கானா உள்ளது. பின்னர் ஒடிஷா, கர்நாடகா, ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், பெங்கால், மஹாராஷ்ட்ரா மற்றும் உத்திர பிரதேசம். பின்னர் 10 ஜமாஅத்களின் தரவரிசை நிலவரத்தை அறிவித்தார்கள்; ஹைதராபாத் முதலிடத்திலும், கோயம்புத்தூர் (தமிழ்நாடு) இரண்டாமிடத்திலும், காதியான் மூன்றாமிடத்திலும் உள்ளன. அதைத் தொடர்ந்து காலிகட், மேலப்பாளையம், பெங்களூரு, கேரங், கருளாயி, கல்கத்தா மற்றும் கண்ணூர் டவுன் ஆகியவை உள்ளன.***

தஹ்ரீகே ஜதீத் சந்தாக்கள் மூலம் ஆப்பிரிக்காவில் 7,601 பள்ளிவாசல்கள், 2,400 மிஷன் ஹவுஸ்கள் மற்றும் முபல்லிக்கள் முஅல்லிம்களின் செலவினங்கள் பூர்த்தி செய்யப்படுகின்றன. நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் 13 நாடுகளில் 620 பள்ளிக் கூடங்கள் மற்றும் 14 நாடுகளில் 41 மருத்துவமனைகள் மற்றும் கிளினிக்குகள் சேவையாற்றி வருகின்றன. இது தவிர பல்கலைக்கழகங்கள், கல்வி உதவித்தொகைகள், 26 வானொலி நிலையங்கள், MTA ஸ்டுடியோக்கள் மற்றும் உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள தப்லீக் மற்றும் கல்வித் திட்டங்களுக்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. இவ்வனைத்து மகத்தான சேவைகளும் ஜமாஅத் உறுப்பினர்களின் கலப்பற்ற பொருள் தியாகங்களினாலேயே நடைபெற்று வருகின்றன; குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட இந்த தியாகங்களினால் அசாத்தியமான விளைவுகள் கிடைத்து வருகின்றன.

தஹ்ரீகே ஜதீத் மற்றும் பிற தலைமையக சந்தாக்கள் மூலமாகவே ஜமாஅத்தின் செலவுகள் நிறைவேற்றப்படுகின்றன; இவை ஜமாஅத் உறுப்பினர்களின் தூய தியாகங்களாலும் அல்லாஹ்வின் அருளாலுமே சாத்தியமாகின்றன. தியாகம் செய்த அனைவரது செல்வத்திலும் உயிர்களிலும் அல்லாஹ் தஆலா பரக்கத்தை வழங்குவானாக; அவர்களுக்குச் சிறந்த நற்கூலியை அருள்வானாக. ஆமீன்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)